## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2011). 20–12–2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2010) நிராகரிப்பது குறித்த தீர்மானம். திரு. செ.ம. வேலுசாமி, தான் கொடுத்துள்ள தீர்மானத்தை முன்மொழியலாம். (குறுக்கீடு) திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.*

**திரு. கி. ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சி திருத்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இப்போது மாநகராட்சியினுடைய எல்லை விரிவாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளை உள்ளடக்கி ஏறக்குறைய 800 உள்ளாட்சிப் பிரதிநிதிகள் வருகிறார்கள். அந்தப் பகுதிகளையெல்லாம் அதிலே சேர்ப்பதாலே மக்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும் என்ற குறை இருந்து கொண்டிருக்கிறது.*

---

*@ 13-1-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

[திரு. கி. ஆறுமுகம்] [2011 ஜனவரி 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தாம்பரம், அம்பத்தூர் போன்ற பகுதிகளிலே புதிய மாநகராட்சியை உருவாக்கினால், அடிப்படை வசதிகள் செய்வதற்கு அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஏற்கெனவே, சென்னை மாநகரம் பெரிய மாநகரமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, அந்த மாநகராட்சியால் இந்தப் பணிகளை முழுமையாகச் செய்ய முடியாத நிலையில் இன்னும் அதிகமான சுமை ஏற்படும். எனவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இதிலே கவனத்தைச் செலுத்தி, புதிதாக தாம்பரம் மற்றும் அம்பத்தூர் மாநகராட்சிகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை நிலைக் குழுவுக்கு அனுப்பி, ஆய்வு செய்த பின்னர் இதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் எனப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி திருத்தச் சட்டமுன்வடிவின்மூலம் சென்னை மாநகராட்சியின் எல்லையை விரிவாக்கம் செய்ய அரசு முடிவு எடுத்துள்ளது. ஆனால், அதன் காரணம் மற்றும் நோக்கங்களை சட்டமுன்வடிவில் தெரிவிக்கவில்லை. இதைக் கவுன்சிலர்களே எதிர்க்கின்றனர். நகராட்சியை மாநகராட்சியாக மாற்றம் செய்து அறிவிக்க, குறைந்தபட்சம் மக்கள்தொகை 5 இலட்சத்திற்கும் குறையாமல் இருந்தால் போதுமானது. ஆனால், தற்போது சென்னை மாநகராட்சியில் மக்கள்தொகை கிட்டத்தட்ட 98 இலட்சம் பேர் இருக்கின்றார்கள். 98 இலட்சம் மக்களுக்கும் சென்னை மாநகராட்சியில் சரியான சாலை வசதியில்லாமல், கழிவுநீர்ப் பாதைகள் சரியாக இல்லாமல், குப்பைமேடுகளும் சுகாதாரக்கேடுகளும் நிரம்பியுள்ளன. இந்த நிலையில் நகராட்சியின் விரிவாக்கம் நல்ல பலனைத் தராது.

மேலும், பொதுமக்கள், தாங்கள் வசிக்கும் பகுதி மாநகராட்சி எல்லைக்குள் வரும்பொழுது நில மதிப்பு உயரும்; சாலை வசதி, குடிநீர் வசதி பெருகும்; பதிவுக் கட்டண உயர்வால், அரசுக்கு வருவாய் அதிகரிக்கும்; வசதிகள் பெருகும் என்று

2011 ஜனவரி 13] [திரு. சு.ப. வேலுமணி]

நினைத்திருப்பார்கள். இது ஒரு மாயை என்பது தாமதமாகத் தெரியவரும். ஆனால், உண்மையில் நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டால், ஊராட்சியின் ஜனநாயகச் செயல்பாடுகள் தடைபடும். திட்டங்களின் பலன்கள் அனைத்துப் பகுதிகளையும் சென்றடையாது. நிருவாகம் பிரச்சினைக்குரியதாகிவிடும். கிராமம் மற்றும் ஊராட்சிகளின் விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாறும் நிலை உருவாகும்.

மத்திய அரசின் திட்ட உதவிகளும், பஞ்சாயத்துராஜ் திட்டத்தின்மூலம் கிராம ஊராட்சிகளுக்குக் கிடைக்கும் நிதி உதவிகளும் நேரடியாகக் கிடைக்காது. நிதி கிடைப்பதற்கு மாநகராட்சி ஒரு இடைத்தரகர்களைப்போல் செயல்படும் நிலை உருவாகும். அதேபோல், விவசாயம் மற்றும் கிராமப்புறத் தொழில்கள் அந்தந்தப் பகுதியிலிருந்து அழியும் நிலை உருவாகும். மாநகராட்சியின் எல்லை விரிவாக்கத்தின்மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த முடியாத நிலை உருவாகலாம். ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் மாநகராட்சியின் நிதி செலவிட வழிவகுக்கும். இதனால் மாநகராட்சியின் பகுதிகளுக்குள் ஏற்றத்தாழ்வு நிலை உருவாகும். ஊராட்சியின் வருவாயை ஊராட்சியே உபயோகித்துக்கொள்ளும் நிலை மாறுவதால், ஊராட்சிகள் தன்னிறைவு பெற முடியாத நிலை உருவாகும். எனவே, 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டமுன்வடிவில் தற்போது கொண்டுவரக்கூடிய திருத்தத்தை நீக்க வேண்டும். அதேபோல், நம்முடைய துணை முதல்வர் அவர்கள் பேசும்போது தொடர்ந்து கருப்புச் சட்டையைப் பற்றிப் பேசினார்கள். கருப்புச் சட்டையை நாங்கள் அணிந்து வந்தது. . .

பிற்பகல் 2–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு துணை முதல்வர் ஏதாவது சொல்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய வார்டுகள் எண்ணிக்கையை நிர்ணயிப்பது குறித்து, இந்தியாவில் உள்ள முக்கிய

பெருநகரமாக இருக்கக்கூடிய மாநகராட்சிகளில் புதுடில்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத் ஆகிய இடங்களின் மக்கள் தொகை, பரப்பளவு, வார்டுகளின் எண்ணிக்கை பரிசீலிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சி வார்டு எண்ணிக்கையை 200 ஆக நிர்ணயம் செய்ய முடிவு செய்யப்பட்டது. மாநகராட்சியை விரிவுபடுத்தினால்தான் கூடுதல் நிதியுதவி, மானியம் போன்றவை சென்னையின் தேவைக்கேற்ப பெறமுடியும். இந்த அடிப்படையில்தான் பெங்களூரு, ஹைதராபாத் போன்ற மாநகராட்சிகள் எல்லையை விரிவுபடுத்தியிருக்கின்றன என்பதையும் கவனத்திலேகொண்டுதான் இதை நாம் கொண்டு வருகிறோம். 42 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து, சென்னை மாநகராட்சி எல்லையை விரிவுபடுத்துவதற்காக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2011 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2011). மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.